# திருவையாறு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

**அ.வ.எண்: 176/2017**

**வா.சா.2**

**நாள்: 03.07.2025**

வாதி தரப்பு சாட்சியாக வாக்குமூலம் 1969 ஆம் ஆண்டின் 44 ஆம் விதியின் கீழ் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | மாரிமுத்து |
| தந்தை பெயர் | சுப்ரமணியன் |
| கிராமம் | மைக்கேல்பட்டி |
| வட்டம் | பூதலூர் |
| தொழில் | கிராம நிர்வாக அலுவலர், ஒன்பத்துவேலி |
| வயது | 37 |

**முதல் விசாரணை :**

நான் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை கிடைக்கபெற்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தற்சமயம் ஒன்பத்துவேலி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்பத்துவேலி கிராம புல எண்.1C, 1D/1, 1D/2, 1F/1 ஆகிய புலஎண்களில் 2017 ம் ஆண்டு முதல் தற்போது வரை உள்ள அடங்கல் பதிவேட்டை கொண்டு வந்துள்ளேன். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள 41C/1 புல எண் திருக்காட்டுப்பள்ளி பேரூராட்சிக்கு உட்பட்டது. ஒன்பத்துவேலி கிராமத்திற்கு உட்பட்டது அல்ல என்பதால் அதற்கான அடங்கல் என்வசம் இல்லை. 2017 ம் ஆண்டு முதல் தற்போது வரை அடங்கல் பதிவேட்டை பார்வையிட்டதில் புல எண்.1C–யில் காசிநாதன், நாகராஜ், ராஜமாணிக்கம், சாமிநாதன் ஆகியோர் அனுபவத்திலும், புல எண்.1D/1– நாகராஜ் அனுபவத்திலும், புல எண்.1D/2– ராஜமாணிக்கம் அனுபவத்திலும், புல எண்.1F/1– ராமதாஸ் அனுபவத்திலும் உள்ளது. மேற்படி நபர்களுக்கு B Memo கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி நபர்களுக்காக அவர்களது வாரிசுகள் அரசுக்கு தண்டத்தீர்வை செலுத்தி வருகிறார்கள்.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மேற்படி சொத்துக்கள் அனைத்தும் நீர்நிலை புறம்போக்கு வகையை சேர்ந்தது என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் திருக்காட்டுப்பள்ளி பொதுப்பணித்துறையின் பராமரிப்பில் உள்ளவை என்றால் சரிதான். மேற்படி சொத்துக்களை வாதிகள் ஆக்கிரமித்து செய்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

மறுவிசாரணை : இல்லை.

/ஒ.ம்/
திரு.P. ரமேஷ், B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவையாறு.